Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar Case No. **STC.50/2022**
Miscellaneous
Preliminary Register
Deposition of _PW- 1 /_

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மதனகோபால் | Father Name | : | பாஸ்டின் |
| Village | : | செம்மங்குடி | Taluk | : | |
| Caste | : | | Calling | : | ஓட்டுநர் (ஓய்வு) |
| Religion | : | | Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of December 2023.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் 31.03.2022 ம் தேதி எதிரி எனக்கு ரூபாய் 3.65,000 க்கு காசோலை கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 31.03.2022 ம் தேதி அன்று வங்கியில் பணத்தை பெறுவதற்காக காசோலையை செலுத்தினேன் என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் எனது பிராதிலும் 15.02.2022 ம் தேதி குடும்ப செலவுக்காக ரூ.3,65,000 எதிரி பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளேன்என்றால் சரிதான். நான் பணம் கொடுத்த தினத்தன்று எதிரியின் வழக்கு காசோலையை தவிர வேறு எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் வேறு எந்த காசோலையும் எனக்கு கொடுக்கவில்லை. பணம் கொடுத்த தேதிக்கு

1. பின்னர் எதிரி எனக்கு வேறு எதுவும் எனக்கு காசோலை கொடுத்தாரா என்றால் 15.03.2022 ம் தேதி அன்று ரூ.1,90,000 க்கும் காசோலை கொடுத்தார். அது தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 15.03.2022 அன்று எதிரி எனக்கு ரூ.1,90,000 க்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றும், 15.02.2022 ம் தேதி எதிரி என்னிடம் ரூ.3,65,000, காசோலை எண்.431925 கொண்ட

காசோலையும், க்கும் ரூ.1,90,000 காசோலை எண் 431926 கொண்ட காசோலையும், மேலும் இரண்டு பூர்த்தி செய்யப்படாத காசோலையும் (எண்.257704, 431912 ) மற்றும் கடன் உறுதி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 15.02.2022 ம் தேதி ரூ.3,65,000 க்கு காசோலை கொடுத்துவிட்டு அதற்கு பணம் வராமல் இருக்கும்போது அடுத்த ஒரு மாதத்திலேயே 15.03.2022 ம் தேதி ரூ.1,90,000 கொடுக்கப்பட்டு அதற்காக 30.04.2020 ம் தேதியிட்ட காசோலை எதிரியால் கொடுக்கப்பட்டது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்சொன்ன பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் மற்றும் கடன் உறுதி பத்திரம் என் வசம் உள்ளது என்றால் சரியல்ல.

2. ரூ.3,65,000 க்கு 13.04.2022 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என்னால் எதிரிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.6 ஆவணமானது எதிரியால் எனக்கு கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பில் எதிரி 10.01.2019 ம் தேதி ரூ.3,65,000 த்தை இரண்டு தவனையாக ரூ.3,00,000 தை முதல் தவனையாகவும், ரூ.65,000 இரண்டாவது தவனையாகவும் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் அவ்வாறு எதிரி பதிலறிவிப்பில் கூறியுள்ளது தவறு. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளவாறு ரூ.3,65,000 த்தை எதிரிக்கு திருப்பி கொடுத்தால் வழக்கை முடித்துக் கொள்ள தயாராக உள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மனுவில் கூறியுள்ள சங்கதிகள் தவறானது என்றும், எதிரி பதிலறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையானது என்றால் சரியல்ல.